REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
[ஏப்ரல் முதல் தேதியிலிருந்து]
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 நயா பைசா
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 16௳ வெள்ளி (29—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 17௳ சனி (30—3—57) [இதழ் 249

'தி.மு.க. பெற்றுள்ள வெற்றி பெருமைக்குரியது'

★

'அடிப்படை நிதி வசதி நமக்கு அறவே இல்லை'

'தனிச் சின்னம் கிடைக்காததால் தோல்விகளும் ஏற்பட்டது'

'ஏமாற்றம் ஏற்பட்டிருப்பினும் மக்களின் ஆதரவு கண்டு ஏற்றமும்-பெருமிதமும் கொள்வோம்'

'குறுக்கு வழிகளில் காங்கிரஸ் புகுந்து சென்றதை நாட்டு மக்கள் நன்கறிந்து கொண்டனர்'

'முறைகளைக் காட்டும் தேர்தல் சட்டத்திற்குத் தீயசக்திகளின் பேயாட்டத்தைத் தடுத்து நிறுத்த சக்தியில்லை'

'தொல்லைகளைத் தாங்கி தனியாக நின்ற கழகத்திற்குப் பெருமைதேடித் தந்த வாக்காளர் பெருமக்களுக்கு உளங்கனிந்த நன்றி உரித்தாகுக'

பொதுத்தேர்தல் முடிவு குறித்துப் பொதுச்செயலாளர் அறிக்கை

பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்தில் — குறிப்பாகத் தமிழகத்தில் பொதுத் தேர்தல் நடைபெற்று முடிந்துவிட்டது. இந்தத் தேர்தலில் ஈடுபட்ட பல்வேறு கட்சிகளும், பொதுமக்களும் தேர்தலின் விளைவால் ஏற்பட்டுள்ள தெளிவான நிலைமைகளை ஆராய்ச்சி செய்வதில் இப்பொழுது இறங்கியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாமும் தேர்தலின் விளைவுகளை ஆராய்ந்து பார்க்க வேண்டிய இன்றியமையாத கட்டத்திற்கு வந்துள்ளோம்.

இன்றைய சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் உண்மையும் உறுதியும், அறிவும் ஆற்றலும், தகுதியும் திறமையும் பெற்ற எதிர்க்கட்சியாக இயங்கக்கூடியதாகும் என்பதை இந்தத் தேர்தல் நாடறியச் செய்துவிட்டது,

காங்கிரசுக்கு அடுத்தபடியாக வலிவுள்ள—தமிழகமெங்கும் விரிவாகப் பரவியுள்ள பெருங் கட்சியாக வளர்ந்திருப்பது திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை அரசியல் தலைவர்களும் பத்திரிகையாளர்களும் பொதுமக்களும் சுட்டிக் காட்டிவருவது நமக்கெல்லாம் பூரிப்பையும் பெருமதிப்பையும் தருவதாகும்.

தமிழக சட்டசபையில் அமைந்துள்ள 205 இடங்களில் நாம், தேர்தல் சூழ்நிலையை அடிப்படையாகக்கொண்டு எதிர்பார்த்தது ஏறத்தாழ 30 இடங்கள்; ஆனால், நாம் 15 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. இது திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நமக்கு ஓரளவுக்கு ஏமாற்றத்தை உண்டாக்கியிருப்பினும், வாக்காளர் பெருமக்கள் நமக்குத் தந்துள்ள ஆதரவை எண்ணிப் பார்க்கும்பொழுது நமக்கு ஏற்றமும் மகிழ்ச்சியும், பூரிப்பும் பெருமிதமுமே ஏற்படுகின்றன.

நாம் இந்தத் தேர்தலில் 16,28,598 வாக்குகளைப் பெற்றிருக்கிறோம். ஆதிக்க பலமும், அதிகார பலமும், பண பலமும், தீய படைபலமும் பெருவாரியாகக் கொண்ட காங்கிரஸ் 201 இடங்களில் போட்டியிட்டு 50,40,587 வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

ஆனால், நாம் 15 இடங்களைப் பெற்றிருக்கிறோம்—காங்கிரஸ் 151 இடங்களைப் பெற்றிருக்கிறது. நம்மைவிட இரண்டு பங்கு மட்டுமே அதிக வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ், ஒன்பது பங்கு அதிகமான இடங்களைப் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்கள் பல இடங்களில் கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தும், குறைந்த அளவு எண்ணிக்கை வித்தியாசத்தில் தோல்வியடையும் நிலை ஏற்பட்டதுதான். பெரும்பான்மையான திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்களுக்குப் போதுமான இன்றியமையாத அடிப்படை வசதிகள் அறவே இல்லாமையே, இந்நெருக்கடியான நிலை ஏற்பட்டதென்பதை உண்மை நிலையை ஆராய்ந்து பார்ப்போர் எளிதில் உணரலாம்.

இந்தப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ், ஆட்சிபீடத்தில் அமர்ந்துகொண்டு அரசாங்க ஆதிக்கத்தையும், அதிகாரத்தையும், சலுகைகளையும், வசதிகளையும் தனக்கு முழுக்க முழுக்க சாதகமாக்கிக் கொண்டதோடு, நாடெங்கிலும் கோடிக்கணக்கான ரூபாய்களையும் பக்கபலமாக்கி, வெற்றிக்கான குறுக்கு வழிகளையும் அமைத்துக் கொண்டதென்பதை நாட்டினர் எல்லோரும் நன்கு அறிவார்கள்.

தாம் போட்டியிடும் எல்லா இடங்களிலுமே வெற்றி கிட்டிவிடும் என்கின்ற நம்பிக்கையில் தனது அபேட்சகர்களை திராவிட முன்னேற்றக் கழகம் நிறுத்தவில்லை. நாம் மேலே குறிப்பிட்டுள்ளபடி இன்றைய சூழ்நிலையில் குறைந்தது 30 இடங்களில் வெற்றி பெறும் வாய்ப்பு இருக்குமென திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்பார்த்தது.

காங்கிரஸ் ஆதிக்கமும் ஜனநாயகமற்ற போக்கும், நமக்குத் தொல்லை கொடுக்காமல் தடுத்து நிறுத்தவே சில தொகுதிகளில், கழகம் தனது அபேட்சகர்களை நிறுத்திற்று. வேறு சில இடங்களில் கழகத்தின் சக்தி சிதறாமல் காப்பாற்றப்படவும், கழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்கவேண்டுமென்று கருதியும் கழக அபேட்சகர்கள் நிறுத்தப்பட்டார்கள். நாம் எதிர்பார்த்த இடங்கள் சிலவற்றில் வெற்றி கிட்டாமற்போனதற்கு நிதி வசதியின்மையே முக்கிய காரணமாகும்.

தேர்தலுக்கு முன்னால் நாம் முடிவு செய்தபடி ஐந்து இலட்சம் ரூபாய் திரட்டுவதற்கான வழிவகைகள் நிறைவேறியிருக்குமானால், மேற்கண்ட குறைபாடுகளை எளிதில் தவிர்த்திருக்க முடியும். தேர்தல் பணிகளில் இப்போதுதான் நாம் முதன்முதலாக இறங்க வேண்டியவர்களாக இருந்தபடியாலும், தேர்தல் பணியில் போதுமான பயிற்சியும் பழக்கமும், அதே சமயத்தில் போதுமான நேரமும் இல்லாத படியாலும் தொகுதிகளை ஆராய்தல், அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்தல், பிரச்சார வசதிகள் காணுதல் ஆகியவற்றிலே தேர்தல் நாள்வரையில் முழுகவனம் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டபடியாலும், நிதி திரட்டும் திட்டம் நிறைவுபெற இயலாமற் போய்விட்டது.

நமது கழகத்திற்கென தனிச் சின்னம் கிடைக்கப் பெறாததும் சில தொகுதிகளில் தோல்விகளுக்குக் காரணமாயிருந்திருக்கிறது.

கழகத் தோழர்களுக்குத் தேர்தல் பணியில் போதுமான பயிற்சியும் பழக்கமும் இல்லாததால் வாக்காளர்ப் பட்டியலை முன்கூட்டியே செம்மைபடுத்தவோ, கழக ஆதரவாளர்கள் பலரையும் வாக்காளர்களாக்கவோ, தேர்தல் தினத்தன்று வாக்காளர்ப் பட்டியல்களிலுள்ள குறைபாடுகளைத் தடுக்கவோ, பெருவாரியான அளவில் வாக்குகளை பதிவு செய்யும்படி வாக்காளர்களுக்குத் தெளிவு பயக்கவோ இயலாமற் போயிற்று.

கடமை—கண்ணியம் — கட்டுப்பாடு ஆகியவைகளை அடிப்படையாகக்கொண்டு பணியாற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நம்மைப் போன்றவர்களுக்கு நீதி வழங்கவேண்டிய தேர்தல் சட்டம், நாணயமற்ற — நேர்மையற்ற—தீய சக்திகளின் அக்கிரமங்களைத் தடுத்து நிறுத்த சக்தியற்றதாயும், இன்னும் சொல்லப்போனால் அத்தீயச் சக்திகளுக்குப் பாதுகாப்பாயும் அமைந்திருப்பது கண்டு மிகவும் வருந்த வேண்டியிருக்கிறது.

நமது நாட்டில் தேர்தல் என்பது மிகக செலவினம் பயக்கக் கூடிய ஒன்றாகவும், நாணயமாணவர்கள்— நேர்மையானவர்கள்—ஏழைகள் துணிந்து அணுக முடியாத ஒன்றாகவும் அமைந்திருப்பதும் வருந்தத் தக்கதாகும்.

இரட்டை உறுப்பினர் தொகுதிகளில் பெரும்பான்மையான வாக்குகள் செல்லுபடியாகாமற் போகுந் தன்மையிலும் தேர்தல் முறை அமைந்திருக்கிறது. இந்தக் குறைபாடுகளை நீக்காமற் போனது மிக வருந்தத் தக்கதாகும். இத்தகைய குறைபாடுகளெல்லாம் சேர்ந்து, சில தொகுதிகளில் தி. மு. கழகம் வெற்றிபெறாமற் போனதற்குக் காரணங்களாயிருந்தன.

இவை மட்டுமல்லாமல், மற்ற அரசியல் கட்சிகள் எல்லாம் தனித் தனியாகவும், கூட்டாகச் சேர்ந்துகொண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தை முழுமூச்சுடன் எதிர்த்திருக்கின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள தொல்லைகள் போட்டிகள், குறைபாடுகளுக்கிடையே திராவிட முன்னேற்றக் கழகம் தன்னந் தனியாக நின்று சட்டசபையில் 15 இடங்களையும், 16,28,598 வாக்குகளையும்; பாராளுமன்றத்தில் நேரிடையாக இரண்டு இடங்களையும், ஆதரவு தந்த முறையில் மேலும் இரண்டு இடங்களையும் பெற்றிருப்பதானது, உண்மையிலேயே கழகத்தின் ஏற்றத்தையும், ஆக்கத்தையும், வளர்ச்சியையும் காட்டுவதாகும்.

கழகத்திற்கு இத்தகைய புகழையும் பெருமையையும், பொலிவையும் வலிவையும், ஆக்கத்தையும் ஊக்கத்தையும், மதிப்பையும் மகிழ்ச்சியையும் நாடெங்கிலும் தேடித் தந்த வாக்காளர் பெருமக்கள் அத்தனை பேருக்கும் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஆங்காங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், முஸ்லீம் சமூகத்தினரும், தொழிலாளர் தோழர்களும், விவசாயிகளும், வியாபாரிகளும், மாணவர்களும் இளைஞர்களும், ஆன்றோரும் சான்றோரும், தாய்மார்களும், கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், நாட்டின் நலனில் அக்கறை கொண்ட நல்லவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முயற்சிக்கு உறுதுணையாக இத்தேர்தலில் இருந்தது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தேர்தலில் நாம் பெற்றுள்ள புதிய அனுபவமும் ஆர்வமும், மேலும் பல இடங்களில் புதிய கிளைகள் தழைக்கவும், கழகக் கொள்கையைப் பரப்பவும், எதிர்கால வெற்றிக்கு ஆக்கந் தேடவும் ஆன நிலை உருவாகியிருப்பதைக் கண்டு நாம் பெரிதும் பூரிப்படைகிறோம்.

வடநாடு—தென்னாடு பற்றிய ஏற்றத்தாழ்வு பிரச்சினைகளையும், இந்திய அரசியலார் இழைத்துவரும் அநீதிகளையும், திராவிடம் தனித்து வாழ வேண்டிய அவசியத்தையும் கிராம மக்களும் பொதுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய நிலைமையை இப்பொதுத் தேர்தல் உணர்த்தியுள்ளதை நாமெல்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 29—3—57 வெள்ளி

நியாயம் இருக்கிறது?

சேலம் மாவட்டத்தில் கிடைக்கப்பெறும் இரும்பு கனிப் பொருளை மண் வேருகவும் இரும்பு சத்து வேருகவும் பிரித்தெடுத்து உருக்கு இரும்பாக்க, அப்பகுதியிலேயே வசதியான இடத்தில், ஒரு தொழிற்சாலையை நிர்மாணிக்க வேண்டும் என்று கோரப்பட்டு வந்திருக்கிறது. இதே கோரிக்கையை உள்ளடக்கி, காங்கிரசுக் கட்சி ஆதிக்கத்திலிருக்கும் சேலம் மாவட்டக் கழகமும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் நமது கழகத்தைச் சேர்ந்த மாவட்டக் கழக உறுப்பினர் என்பது கருதத்தக்கது.

இக்கோரிக்கையை நாமும் பலமுறை, கோரிக்கையில் உள்ள நியாயத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டி வற்புறுத்தி எழுதி வந்துள்ளோம். நமது கழக மாநாடுகளும் இது குறித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றி உள்ளன.

தம்மிச்சையாக வலிய வந்து இக்கோரிக்கையை உடனடியாக செயல்படுத்தும் கடமை கொண்டுள்ள இந்தியப் பேரரசு இவ்வளவு பலமான முயற்சிக்குப் பிறகுதான், கோரிக்கை பற்றி செவிசாய்க்கத் தொடங்கியது. கோரிக்கை குறித்து சமாதானம் கூறுவதிலும் தலைப்பட்டது.

தென்னகத்தைத் தொழில் மயமாக்குவது என்ற பெரும் விருப்பின் சிறு கூறுதான், சேலத்தில் உருக்குத் தொழிற்சாலைத் துவக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை. அப்பெரும் விருப்பை மட்டந்தட்ட அல்லது காலங் கடத்த சொல்லப்பட்டுவந்த நியாயங்களைத்தான், சேலம் உருக்குத் தொழிற்சாலை கோரிக்கைக்கும் இந்தியப் பேரரசு சுட்டிக்காட்டி வந்தது.

எந்தத் தொழிலுக்கும் இன்றியமையாத் தேவையாக உள்ள எரி பொருளான நிலக்கரி, கிடைக்கப் பெருத பொதுக் குறைபாட்டைக் காரணமாக எடுத்துக்காட்டி, பொதுவாக தென்னகத்தைத் தொழில் மயமாக மாற்ற முடியாமைக்குச் சமாதானம் சொல்லி வந்தது இந்தியப் பேரரசு. அதே நிலக்கரி இல்லா குறைபாட்டைக் காட்டி, சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையை நிர்மாணிக்கக் கூடாமைக்கும் சமாதானம் கூறிவந்தது அப்பேரரசு.

இந்தியப் பேரரசு கூறிவந்த சமாதானம் கேட்டு, நாம் திருப்திகொண்டு விடவில்லை. அதுவுமன்றி, உருக்குத் தொழிற்சாலை வேண்டுமென்ற நமது விருப்பத்தைக் கைவிட்டுவிடவுமில்லை. அதற்கு மாறாக, இந்தியப் பேரரசு பிடிவாதம் பேசப்பேச, உருக்குத் தொழிற்சாலை கோரிக்கையை முழு மூச்சுடன் கேட்கத் தொடங்கினோம்.

கோரிக்கை நாளுக்குநாள் வலுப்பெற்று வருவதைக் கண்ட பேரரசு, வேறு கதியற்ற நிலையில் வேண்டா வெறுப்பாக, நெய்வேலித் திட்டத்தின் வெற்றியை குறித்துக் காட்டி, நெய்வேலியில் தோண்டி எடுக்கப்பட இருக்கும் நிலக்கரிக்கும், சேலம் மாவட்ட உருக்குத் தொழிற்சாலைக்கும் முடிச்சுப்போட முன்வந்தது. ஒரு பரிட்சார்த்த உருக்குத் தொழிற்சாலையை சேலத்தில் துவங்க முயற்சிக்கப்படும் என்று முடிவாக பேரரசும் மாகாண ஆட்சியும் வாக்களித்தன.

இப்பொழுது அந்த வாக்கு மதிக்கப்படவில்லை. கொடுத்த வாக்குறுதியை உடைத்தெறிந்துவிட்டு, கோவையில் சிறு உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க தனி நபருக்கு அனுமதி கொடுத்திருக்கிறது இந்தியப் பேரரசு.

சேலத்தில் உருக்கு தொழிற்சாலை ஒன்றைத் துவங்குவதற்கு இயலாது என்பதற்காக இந்தியப் பேரரசு துவக்க முதல் சுட்டிக் காட்டிவந்த காரணங்களை இப்பொழுது நாம் சிந்திக்க வேண்டும். பொதுவாக தென்னகத்திலும் சேலம் பகுதியிலும் நிலக்கரி இல்லாததினால், வெகுதொலைவிலிருக்கும் பிகாரிலிருந்தும் வங்காளத்திலிருந்தும் நிலக்கரியை இறக்குமதி செய்துதான், சேலம் உருக்குத் தொழிற்சாலையை இயங்கச் செய்யவேண்டும். அவ்வகையில் உற்பத்திச் செலவு கூடுதலாகக் கூடும். எனவே, வியாபாரத் துறையில், இலாபகரமான தொழிலாக, சேலம் உருக்குத் தொழிற்சாலையை நடத்துவது என்பது முடியாது. இதன் பலனாக, முடிவில் உருக்குத் தொழிற்சாலை உருப்படாது ஒழிந்துபோகும் என்று இந்தியப் பேரரசு காரணம் காட்டிவந்தது.

இந்த விரும்பத் தகாத நிலை ஏற்படாமல் தடுக்கவும், உருக்குத் தொழில் இலாபகரமானதாக நடைபெற்று வளம்பெறவும் வேண்டுமானால், இரும்பு கனிப் பொருள் கிடைக்கும் சேலத்திற்கு நூறு கல் தொலைவில் உள்ள நெய்வேலியிலிருந்து நிலக் கரியைக் கொண்டுவந்துதான் ஆக வேண்டும். அதனால் உற்பத்திச் செலவு குறைய வழி பிறக்கும். உருக்குத் தொழிலும் எதிர்பார்க்கின்றபடி ஆக்கம் பெறும். இப்படி நெய்வேலி நிலக்கரிக்கும் சேலம் உருக்குத் தொழிற்சாலைக்கும் உள்ள தொடர்பு குறித்து இந்தியப் பேரரசு பேசியது.

இவ்வாறு தொழில் நலம் குறித்து நியாயம் பேசிய இந்தியப் பேரரசு சேலத்தில் கிடைக்கப்பெறும் இரும்பு மண்ணை ஏற்றிச்சென்றும், தொலைவில் உள்ள பிகார் வங்காளத்திலிருந்தோ அல்லது ஏறத்தாழ இருநூறு கல் தொலைவில் உள்ள நெய்வேலியிலிருந்தோ நிலக்கரியைக் கொண்டு வந்தும் கோவையில் குவித்து, கோவையில் துவங்க இருக்கும் தனி நபர் உருக்குத் தொழிற்சாலை தொழில் நடத்தியாக வேண்டும். அதன் பலனாக இரட்டிப்புச் செலவுக்கு இடமிருக்கிறது.

உற்பத்திச் செலவும் இரட்டிப்பாகப் பெருகும். இந்த நிலையில் வியாபாரத்துறையில், இலாபம் தரும் தொழிலாக கோவை உருக்குத் தொழில் இல்லாது போவதுடன், இரட்டிப்பு மடங்கு நஷ்டம்தரும் தொழிலாகவும் முடிவுறுவது எதிர்பார்க்கக்கூடியதேயாகும்.

சேலம் மாவட்ட உருக்குத் தொழிலுக்குத் தேவையான இரும்பு கனிப் பொருள் அம்மாவட்டத்திலேயே இருக்கிறது. அதை உருக்குவதற்குத் தேவையான நிலக்கரியை மட்டுந்தான் தொலைவில் உள்ள பிகாரிலிருந்தோ வங்காளத்திலிருந்தோ இறக்குமதி செய்தாக வேண்டும். ஒரு மூலப் பொருளான நிலக்கரியைத் தொலைவிலிருந்து இறக்குமதி செய்வதினால் ஏற்படக்கூடிய செலவு ஒன்றினால் மட்டுமே, உருக்குத் தொழிலை இலாபகரமாக நடத்த முடியாது எனக் காரணம் காட்டி, சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை துவங்குவது கூடாது எனப் பிடிவாதம் காட்டி வந்திருக்கிறது இந்தியப் பேரரசு, ஆனால் அதே பேரரசு, இரும்பு மண்—நிலக்கரி ஆகிய இரண்டு மூலப் பொருட்களையுமே தொலைவிலிருந்து பெருஞ் செலவில் இறக்குமதி செய்து, தொழில் நடத்தவேண்டிய கட்டாயத்தில் உள்ள கோவையில், உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க அனுமதித்திருக்கின்றது என்றால், அதை எந்த வகை நியாயம் என்பது?

‘தி. மு. கழகத்தின் அறிவுப் பணி சட்டசபையிலும் எதிரொலிக்கும்’

‘கழகக் குரலை இதுவரையில் மதிக்காத காங்கிரசார் இனியும் அவ்வாறு இருக்க இயலாது’

‘தி. மு. க. இலட்சியக் குறிக்கோளை வாக்காளர் பெருமக்கள் ஏற்றுக் கொண்டதைத் தேர்தல் நிரூபித்துவிட்டது’

‘திரண்டெழுந்த சக்திகளுக்கு எதிராக கழகத்தினர் பெற்ற வெற்றி மிகச் சாதாரணமானது அல்ல’

“இதுவரையிலும் சென்னைத் தேர்தலில் பகிரங்கமாகக் குதிக்காமல் வெறும் பிரச்சாரப் போரிலேயே மேடைகளைத் தேடிவந்த திராவிட முன்னேற்றக் கழகம், இத்தேர்தலில் பகிரங்கமாகக் குதித்தது.

“சமூக சீர்திருத்தத்தையே முழுக் குறிக்கோளாகக் கொண்ட இக்கழகத்திற்கு திடீரென அரசியல் மோகம் ஏற்படக் காரணம் என்ன?—என்ற சிந்தனை, யாருக்குமே தோன்ற உரிமையுண்டு. அரசியல் ஆதிக்கத்தின் மூலம் சமூகத்தில் திருத்தங்களைக் கண்டு விடலாம் என்ற நம்பிக்கையின் பேரில் தி. மு. கழகத்தினர் தேர்தல் போருக்கு முன்வந்திருக்கக்கூடும் என்று நம்புவதிலும் தப்பு இல்லை.

“தி. மு. கழகத்தை யார் என்ன எதிர்த்தாலும், ஏசினாலும், பேசினாலும், அவர்களது கருத்திலும், இலட்சியத்திலும், சென்னையிலும் தமிழ் நாட்டில் 16,28,598 வாக்காளர்கள் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கின்றனர் என்பதை இப்போதைய தேர்தலில் கண்டிருக்கிறோம்.

“கம்யூனிசத்தின் கற்கோட்டைகளாகக் கருதப்படும் ஜீவானந்தம், மணலி கந்தசாமி, அனந்த நம்பியார், மதன கோபால், ரமணி போன்றோர் தோல்வியுற நேர்ந்திருக்கும் போது, தி. மு. க. வினர் 15 பேர் கணிசமான மெஜாரிட்டியுடன் வெற்றிபெற்றிருக்கின்றனர்.

“ஆஸ்திகத்தின் அரணாகக் கருதப்படும் காஞ்சிபுரத்தில் தி. மு. க. தலைவர் அண்ணுதுரையை முறியடிக்க, காங்கிரஸ் இயந்திரம் தன் முழு சக்தியையும் பிரயோகித்துப் பார்த்தது. அந்த சக்திக்குப் பக்கபலமாகப் பெரியார் ஈ. வெ. இராமசாமியே படை திரண்டு சென்றிருந்தார்.

“இவ்வளவு முஸ்தீபுகள் திரண்டு எழுந்த போதிலும், மக்கள் ஒருமனதாகத் தங்கள் நம்பிக்கையை அண்ணுதுரையின் மீதே செலுத்தியிருக்கின்றனர்.

“அண்ணுதுரையோடு எவ்வளவுதான் அபிப்பிராய வித்தியாசமிருந்தாலும் தொகுதியின் நம்பிக்கையை அவருக்குத்தான் பெறமுடிந்திருக்கிறது என்பதைக் கவனிக்கும்போது அவர்மீது பொதுவாக எல்லோருக்குமே ஒரு அலாதி மதிப்பு ஏற்படுகிறது.

“தமிழ் நாட்டில் பதிவான வோட்டுகளில் 14 சதமானம் தி. மு. கழகத்திற்கு ஆதரவாகியுள்ளது. அகில இந்தியக் கட்சியான கம்யூனிஸ்டு கட்சிக்கு 7·9 சதமானமே பதிவாகியுள்ளதை நோக்கும்போது, கம்யூனிஸ்டுகளைவிட தி. மு. கழகத்தினர் செல்வாக்குப் பெற்றவராக விளங்குகின்றனர் என்பது புலனாகிறது.

“தி. மு. கழகத்தின் குரலை இதுவரையிலும் ஏனென்று கேளாமல் உதாசீனமாக இருந்த காங்கிரஸ்காரர்கள் இனியும் உதாசீனமாக இருந்தால் தி. மு. கழகத்தின் கை மேலும் உயரும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

“வட ஆற்காடு, தென் ஆர்காடு ஜில்லாக்களில் அவர்கள் பலமாக வேரூன்றி நிற்கின்றனர்.

“சட்டசபையில் தி. மு. கழகத்தினர் எங்ஙனம் செயல்படப் போகிறார்கள் என்பதைக் கண்டுதான் அறிய வேண்டியிருக்கிறது. மேடை குலுங்கப் பேசி மக்களின் மனதை அப்படியே விலை பேசி வாங்கும் தனித்திறன்படைத்த அண்ணுதுரையின் அறிவு, சட்டசபைக்கு எத்துணைப் பயன்படப் போகிறது என்பதை பார்த்தாக வேண்டும்.

“மேடை விவாதங்களில் தனிமரமாக விளங்கும் அண்ணுதுரையின் மேதை சட்டசபையில் எங்ஙனம் பூத்து மணம் வீசப்போகிறது என்பதைப் பார்த்து விடுவதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது”

—‘தினமலர்’ 24-3-57

அணு ஆயுத சோதனைகள்

குறிப்பிட்ட காலத்திற்கு ஒத்திவைக்கப்படுமா?

மாஸ்கோ, மார்ச் 26—

அணுகுண்டு, நீர்வளிக்குண்டு சோதனைகளை குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத்திவைப்பது பற்றி மேற்கத்திய நாடுகளோடு உடன்பாடு செய்துகொள்ள ரஷ்யா தயாராக இருப்பதாக ரஷ்ய வெளிநாட்டுத் துறை அறிவித்திருக்கிறதாம்.

★

பிரிட்டனின் நிலை என்ன?

லண்டன், மார்ச் 27—

“ரஷ்யாவுடன் உடன்பாடு செய்துகொண்டு, அணு ஆயுதச் சோதனைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் ஒரு முறையை பிரிட்டன் மேற்கொள்ளலாம்; இது சாத்தியமில்லாவிட்டால், சோதனைகளை மிகச் சிறிய அளவிலும், உலகிற்கு மேலும் ஆபத்து ஏற்படாதவகையிலும் பிரிட்டன் நடத்தக்கூடும்” என்று, பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் கூறியிருக்கிறார்.

★

ஐ. நா..விடம் ஜப்பான் கோரிக்கை எழுப்புகிறது

நியூயார்க், மார்ச் 26—

அணுகுண்டு, நீர்வளிக்குண்டு உற்பத்தி—பயன்படுத்தல்—சோதனை செய்தல் ஆகியவைகளுக்கு உடனே முழு அளவில் தடை விதிக்கவேண்டுமேன்று ஐ. நா. மன்றத்திடம் ஜப்பான் அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது. மேலும், அணுசக்தியை ஆக்கத்துறைக்கே பயன்படுத்த வேண்டுமெனவும், அதற்காவன செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டிருக்கிறது.

★

போலந்து—இந்தியப் பிரதமர்கள் கூட்டறிக்கை

புதுடில்லி, மார்ச் 27—

“ஆயுதக் குறைப்புக்கு உடனடியான நடவடிக்கையாக அணு—நீர்வளிக்குண்டு சோதனைகளுக்குத் தடை விதிக்க வேண்டும்”

என்று, இந்தியா—போலந்து பிரதமர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

“இப்பரிசோதனைகள் தொடர்ந்து நடைபெற்றால் எல்லா உயிரினங்களுக்கும் ஆபத்து ஏற்பட்டு, வருங்கால மனிதவர்க்கத்திற்கும், நாகரீகத்திற்கும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத விபரீத விளைவுகள் ஏற்படக்கூடும்.”

‘இந்தியாவுக்கு முழு உரிமைகள்’

“காஷ்மீரில் இந்தியாவுக்கு சகல உரிமைகளும் இருப்பதாகப் போலந்து கருதுகிறது” என்று, போலந்து பிரதமர் புதுடில்லியில் பத்திரிகையாளரிடம் பேசுகையில் கூறியிருக்கிறார்.

“கோவாவும் இந்தியாவுக்கு உரியது என்றே நாங்கள் கருதுகிறோம்,” என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பல கட்டுப்பாடுகள் விதித்தும்கூட உற்பத்தியைக் கூடுதலாக்கினராம்!

விலை அதிகரிப்பால் 5 இலட்சம் பேல் ஆலை துணிகள் தேங்கிக் கிடக்கிறதாம்!

அதிக வரி உயர்வுதான் விலை அதிகரிப்புக்குக் காரணமாம்!

ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கத் தலைவர் வாதம் பேசுகிருர்

பம்பாய், மார்ச் 28—

"துணி உற்பத்திக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதிலும் 1955-ல் உள்ளதைவிட 1956-ல் சுமார் 21 கோடி கெசம் துணி அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டது.

"கைத்தறித் துணிகளுக்கு எவ்வளவு உற்சாகமூட்டியும் சுமார் 2 கோடி கெசம் துணியே அதிகம் உற்பத்தி செய்ய முடிந்தது.

"கைத்தறித் துணிக்குப் பாதுகாப்பு தரும்பொருட்டு ஆலைத் துணிகளின்மீது விதிக்கப்படும் வரி அதிகரிக்கப்பட்டது; அதனுல் ஆலைத் துணியின் விலை அதிகரித்துள்ளது. துணியின் விலை அதிகரித்துள்ளதால், உபயோகிப்போர், அதிகத் துணி வாங்குவது தடைப்பட்டுள்ளது.

"ஆலைத் துணி வாங்குவது குறைந்துள்ள காரணத்தால், சுமார் 5 இலட்சம் பேல்களுக்கு மேல் ஆலைத் துணி தேங்கிக் கிடக்கிறது. இதற்கு வரி உயர்வே முக்கியக் காரணமாகும்,"

என்று, பம்பாய் ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கத் தலைவர் சர். ஜான் பர்ன்ஸ், சங்கத்தின் வருடாந்திரக் கூட்டத்தில் பேசுகையில் கூறியிருக்கிருர்.

திட்டத்தின் வெற்றியை மக்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்!

மேலும் பேசுகையில் அவர் கூறியிருப்பதாவது :—

"மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முயற்சியில் அவர்களுக்கு உணவு கிடைக்கச் செய்வது முதல் வேலையாகும்; போதிய அளவு உணவு கிடைக்கும்போது அதிக துணி வேண்டும் என்று மக்கள் எதிர்பார்ப்பார்கள்; தற்சமயம் அரசாங்கம் பின்பற்றும் கொள்கையால் அதிகத் துணி வாங்குவதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படாது என்றே தெரிகிறது. குறைந்த விலையில் துணி கிடைக்கவில்லை ருல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றியை மக்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

கதிர்களும், தறிகளும் அதிகம் வேண்டுமாம்

"நாட்டில் அதிகரித்துவரும் துணித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் மேலும் அதிகக் கதிர்களையும், தறிகளையும் பொருத்துவதற்கு அரசாங்கம் ஆலைகளுக்கு அனுமதி தர வேண்டும்,"

ஆலைகள் வேலை பாதிக்கப்படுமாம்

கம்பெனிகளின் ரிசர்வ் நிதியை சர்க்கார்வசம் டெபாசிட் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையைக் குறிப்பிட்டுப் பேசுகையில் அவர், 'அதனுல் ஆலைகளின் வேலை பெரிதும் பாதிக்கப்படும்' என்று கூறியிருக்கிருர்.

எதிர்ப்பைத் தெரிவிக்க கருப்புக் கொடியுடன் காத்திருந்தனர்

செய்தி தெரிந்த காங்கிரஸ் எம். எல். ஏ. வேறு வழியாகச் சென்றுவிட்டாராம்

காரைக்குடி, மார்ச் 25—

சென்னை சட்ட சபைக்குக் காரைக்குடி தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம். ஏ. முத்தையா (செட்டியார்) வாக்காளருக்கு நன்றி தெரிவிக்க, காரைக்குடி நகரக் காங்கிரஸ் கமிட்டி சார்பில், கல்லுக்கட்டி கணபதிபூங்காவில் ஒரு பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அன்று காலையிலிருந்தே இந்நகரின் பல பகுதிகளில் முத்தையா தேர்ந்தெடுக்கப்பட்டதை எதிர்த்து விளம்பரத் தட்டிகள் வைக்கப்பட்டிருந்தன : ஆனல் போலீசார், அவைகளை அப்புறப்படுத்தி விட்டனர்.

மாலையில் நடைபெற்ற கூட்டத்திற்கு முத்தையா செட்டியார் வரும்போது அவருக்குத் தங்களின் எதிர்ப்பைத் தெரிவிக்க 'மதராஸ் கபே' அருகில் பலர் கருப்புக் கொடிகளுடன் காத்துக் கொண்டிருந்தனராம்; நிலைமையை அறிந்த முத்தையா அவர்கள், அவ்வழியே வராமல் வேறு வழியாக கூட்டத்திற்குச் சென்றுவிட்டதாகச் செய்தி தரப்பட்டிருக்கிறது.

உருவான பணிக்கு கௌரவமான பரிசு!

புதுடில்லி, மார்ச் 27—

இந்திய இராணுவத் தலைமை நிலையத்தில் பணியாற்றும் உயர் வகுப்பு ஊழியர் ஒருவர், பாதுகாப்புத் துறையில் ஆண்டுதோறும் செலவாகும் சில இனங்களில் ரூ. 1½-கோடி மிச்சமாகும் ஒரு திட்டத்தை அரும்பாடுபட்டுத் தயாரித்துத் தந்தாராம்.

அதற்காக, இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சர் மகாவீர் தியாகி அவருக்கு ரூ. 1,000 நன்கொடையளித்ததுடன் நன்றியும் தெரிவித்துக் கொண்டாரென்று செய்தி ஒன்று வெளியாகியிருக்கிறது.

பிரிட்டிஷ் படைகள் வெளியேறுகின்றன

அகாபா துறைமுகத்தில் சவூதி அரேபியர் படைகள் நுழையும்

ஜோர்தானுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு கடந்த ஏழு ஆண்டுகளாக அகாபா துறைமுகப் பகுதியில் பிரிட்டிஷ் படைகள் இருந்து வந்தன.

இப்போது ஒப்பந்த காலம் முடிவடைந்து விட்டதால் பிரிட்டிஷ் படைகள் வெளியேறிக் கொண்டிருக்கின்றன. இனி அகாபா துறைமுகத்தில் பிரிட்டிஷ் படைகளுக்குப் பதிலாக சவூதி அரேபியப் படைகள் இருப்பதற்கு ஏற்பாடாகியுள்ளதாம்.

எகிப்து, ஜோர்தான், சவூதி அரேபியா ஆகிய நாடுகள் ஒன்று கூடி இந்த முடிவைச் செய்துள்ளனவாம்.

பிரிட்டிஷ் படைகள் வெளியேறியவுடன் சவூதி அரேபியாவின் படைகள் அகாபா பகுதியில் நுழையுமாம்.

எகிப்து—இஸ்ரேல்—ஜோர்தான்—சவூதி அரேபியாவின் எல்லைப் பகுதியாக உள்ள அகாபா குடாக்கடலின் வட பகுதியில் இந்த அகாபா துறைமுகம் அமைந்திருக்கிறது.

வாக்குப் பதிவு எண்ணிக்கை

சாதகமானதுதானு?

கேரள கம்யூனிஸ்டுகள் நிலை

திருச்சூர், மார்ச் 28—

கேரள மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலில் மொத்தம் 59 இலட்சம் வாக்காளர்கள் வாக்குப் பதிவு செய்துள்ளனர்.

இந்த வாக்குகளில் கம்யூனிஸ்டு அபேட்சகர்களுக்கும், கம்யூனிஸ்டு ஆதரவு பெற்ற சுயேச்சைகளுக்கும் கிடைத்த மொத்த வாக்குகள் 35 சதவிகிதமேயாகும்.

கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிராக வாக்களித்துள்ளவர்களின் மொத்தம் வாக்குகள் 65 சதவிகிதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

நாசர் ஒப்புகிருராம்!

லண்டன், மார்ச் 27—

சூயஸ்கால்வாய் கட்டணத்தில் 30 சதவிகிதத்தை ஐ. நா.-வில் செலுத்துவதற்கு எகிப்து பிரதமர் நாசர் ஒப்புக்கொண்டுள்ளதாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூருக்குச் சுதந்திரம்

பேச்சுவார்த்தைகள் நிச்சயம் வெற்றி பெற்றுவிடுமாம்

லண்டன், மார்ச் 27—

'சிங்கப்பூருக்கு சுதந்திரம் வழங்குவது பற்றி தற்போது பிரிட்டனுக்கும் — சிங்கப்பூருக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் நிச்சயமாக வெற்றி பெறும்' என்றும், சிங்கப்பூர் பிரதமர் லிம்ஹாக் தெரிவித்துள்ளார்.

சித்தூரில் சர்க்கரை ஆலை அமையும்!

டில்லிப் பேரரசு அனுமதி கொடுத்துவிட்டதாம்!

மதனப்பள்ளி, மார்ச் 26—

சித்தூரில் கூட்டுறவு அடிப்படையில் சர்க்கரை ஆலை ஒன்று நிறுவ இந்தியப் பேரரசு அனுமதி கொடுத்துவிட்டதாம்.

இதற்கு, தினசரி பிழிவதற்கு 2,000 டன் கரும்பும், தொழிற்சாலை நிறுவ ரூ. 75 இலட்சமும் செலவாகுமாம்.

இதில் ஆந்திர மாநில அரசின் பங்குத் தொகை ரூ. 16 இலட்சமாம். தொழில் நிதி உதவி கார்ப்பொரேஷன் ரூ. 45 இலட்சமும் கடன் தருமாம். மீதித் தொகை பங்குகள் மூலம் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படுமாம்.

எச்சில் துப்பியதால் 134 பேர் கைது!

போலீசார் தீவிர நடவடிக்கை

பம்பாய், மார்ச் 28—

பொதுச்சாலைகள் சுத்தமாக இருக்கவேண்டும் என்பதற்காகப் பம்பாய் போலீசார் தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளாராம்.

பொதுச்சாலைகளில் எச்சில் துப்பியதற்காக சென்ற ஞாயிறன்று மட்டும் 134 பேர் கைது செய்யப்பட்டனராம்.

அவர்களனைவரும், இனித் தாங்கள் பொதுச் சாலைகளில் எச்சில் துப்புவதில்லை என்று உறுதி கூறியதன்பேரில் மன்னிக்கப்பட்டு விடுதலை பெற்றனராம்.

வடநாட்டு உருக்குத் தொழிற்சாலைகளில் பணியாற்றுவோரின் எண்ணிக்கை

மக்கள் சபையில் நிதி அமைச்சர் தகவல்

புதுடில்லி, மார்ச் 28—

பிலாய் உருக்குத் தொழிற்சாலையில் தற்போது 50 ரஷ்யர்களும், 1,144 இந்தியர்களும், பணியாற்றுகின்றனராம்!

ரூர்கேலா உருக்குத் தொழிற்சாலையில் யூகோ நாட்டைச் சேர்ந்த ஒருவரும் 1,247 இந்தியர்களும் இருக்கின்றனராம்.

துர்காபூர் தொழிற்சாலையில் 309 இந்தியர்கள் வேலை செய்து வருகின்றனராம்.

இந்தத் தகவலை, மக்கள்சபையில், மத்திய நிதி அமைச்சர் தந்துள்ளார்.

இவர்களைத் தவிர சோவியத் இரும்பு-உருக்குக் காரியாலயத்தின் பிரதிநிதிகள் 27 பேர்களும், பிரிட்டிஷ் ஆலோசக எஞ்சினீயர்களின் பிரதிநிதிகள் மூன்று பேரும், ஜெர்மானிய ஆலோசகர்களின் பிரதிநிதிகள் 13 பேரும் இந்தியாவில் இருக்கின்றனராம்.

ஆலை முதலாளிகளின் தந்திரச் செயல்!

துணிகள் தேங்கிவிட்டதால் கதவடைப்பு ஏற்படுமாம்

ஏப்ரல் இறுதியில் ஆமதாபாத்தில் இரு ஆலைகளை மூடிவிடப்படுமென அதன் முதலாளிகள் அறிவித்துள்ளனராம்.

ஏராளமான அளவில் துணிகள் தயாரிக்கப்பட்டு அவைகள் விற்பனையாகாமல் தேங்கியுள்ளதே ஆலைகள் மூடப்படுவதற்கு முக்கிய காரணம் என்று ஆலை அதிபர்கள் கூறுகின்றனராம்.

இந்த இரண்டு ஆலைகளையும் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்று 80,000 உறுப்பினர்களைக் கொண்ட ஆலைத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்

நன்றியறிவிப்பு

சென்னை சட்டசபைத் தேர்தலில் மதுராந்தகம் பொதுத் தொகுதிக்கு தி. மு. கழக அபேட்சகனுக நின்ற என்னை ஆதரித்து வாக்களித்த வாக்காளர் பொது மக்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றியையும்—வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களின் நலனே என்னுடைய தொண்டும் — கடமையுமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அன்பன்

கே. கோதண்டன்

★

சென்னை சட்டசபைக்கு நாகர்கோவில் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகனுகப் போட்டியிட்ட எனக்கு, வெற்றி—தோல்வி பற்றிக் கவலைப்படாமல், கழகத்தின் கொள்கை—இலட்சியம் வெற்றி பெற, அரும்பாடுபட்டு ஒத்துழைத்துக் கடமையாற்றிய கழகத் தோழர்களுக்கும் — ஆதரவாளர்களுக்கும் எனது பணிவன்பான வணக்கத்தைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

கழகத் தோழர்கள், மக்கள் நலனடைய கழகம் ஆற்ற முற்படும் பணிகளில் மேலும் பங்கு கொண்டு செயலாற்ற விழையும் என்னுடன் ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்

எஸ். முத்துசுவாமி

ஸ்ரீவில்லிப்புத்தூர் (பொது) தொகுதியில் சென்னை சட்டசபைக்கு, தி. மு. கழகச் சார்பில் போட்டியிட்ட என்னை ஆதரித்த வாக்காளர் பெருமக்களுக்கும், ஊக்கத்தோடும்—உற்சாகத்தோடும் உழைத்த கழகத் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும், தாய்மார்களுக்கும் என் உளம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, பொதுமக்களுக்கு எப்போதும்போல் தொண்டு செய்வதிலும் கழக ஆக்கவேலைகளுக் காற்றவேண்டிய பணிகளில் கழகத் தோழர்களோடு ஒத்துழைப்பதிலும் என்றும்போல் முன்னின்று பணிபுரிவேன் என்று உறுதி கூறிக்கொள்ளுகிறேன்.

அன்பன்,

மா. குருசாமி

★

கோவை-1 தொகுதிக்கு தி. மு. கழக அபேட்சகனுகப் போட்டியிட்ட எனக்கு வாக்களித்த பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், தோழர்களுக்கும், கடமை—கண்ணியம்— கட்டுப்பாட்டோடு தேர்தல் பணியாற்றிய கழகத் தோழர்களுக்கும், இளைஞர்களுக்கும், மற்றையோருக்கும் எனது இதயம்நிறைந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

கே. சிவசாமி

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. சட்டசபை-பாராளுமன்ற உறுப்பினர் தனிக் கூட்டம்

★

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நின்று வெற்றி பெற்றுள்ள சட்டசபை—பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிக் கூட்டம் ஒன்று 31—3—57 ஞாயிறு காலை 10-மணிக்கு, சென்னை-இராயபுரம் 'அறிவக'த்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரும் வருகைதர வேண்டுகிறேம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'துக்ளக்கே மேல்! டெல்லிப் பெரியவர்கள் அவனிலும் மோசம்'

'மக்கள் துயர்கண்டு துக்ளக் கூட உத்தரவை ரத்து செய்தான்'

'இவர்களோ கவலையற்றிருக்கின்றனர்'

'புதிய பைசா' தரும் தொல்லைகள் விளக்கம்

மாற்றுத் திட்டம் தருகிறார் ஆச்சாரியார்

சென்னை, மார்ச் 28—

புதிய தசாம்ச நாணய முறை வரும் ஏப்ரல் முதல் அமுலாவதைக் கண்டித்தும், இந்த முறை அமுல் செய்யப்படுவதை ஒத்தி வைக்க வேண்டும் என்றும் கருத்தறிவித்து, சென்னை ஆங்கில இதழ் ஒன்றில், திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் எழுதியிருக்கிறார்:—

"நான் ஒருமுறைக்குப் பன்முறையாகக் கூறியதையே திரும்பவும் கூறவேண்டியுள்ளது, பரிதாபத்திற்குரியதுதான்! ஆனால், இப்போது நிலைமை தெளிவாகிவிட்டதால் என்னை, மக்கள் சுலபத்தில் புரிந்துகொள்ள முடியும்.

"இப்போதுகூட காலம் கடந்துவிடவில்லை.

"உச்சத்தில் மாற்றங்களைச் செய்வதற்குப் பதிலாக, அடிமட்டத்தில் மாற்றங்களைச் செய்வதால் ஏற்படும் தவறினைத் திருத்திக்கொள்ள இப்போதும் முடியும்.

துக்ளக் கூட!

"டில்லியிலிருந்து தலைநகரை மையமான வேறிடத்திற்கு மாற்றுவது என்று, தான் பிறப்பித்த உத்தரவால் மக்கள் பட்ட அவதியைக் கண்ட முகம்மது துக்ளக், தனது உத்தரவைத் திரும்பப் பெற்றான்.

"ஆனால், இந்திய சர்க்காரின் புதிய நாணய முறை மாற்றத்தால் சாதாரண மக்கள் படும் அவதி டில்லியிலிருப்போருக்கு எந்தவிதக் கவலையையும் தரக் காணோம்; என்பதைக் காண வருந்துகிறேன்.

செய்யவேண்டியது என்ன?

"தசாம்ச முறை வேண்டுமென நாம் விரும்பினால், ஒரு ரூபாயில் நூறில் ஒரு பங்கு மதிப்புகொண்ட புதிய பைசாவை உருவாக்குவதற்குப் பதிலாக, 100 பைசாக்கள் மதிப்புகொண்ட புதிய ரூபாய் முறையை—அதனை நாம் விரும்புகிற எந்தப் பெயராலும் அழைத்துக் கொள்ளலாம்—புகுத்தி இருக்க வேண்டும்.

சட்டமின்றி 'வரி'

"இதைச் செய்திருந்தால் குழப்பம் ஏற்பட்டிராது; சம்பாதிக்காமலே சிலருக்கு இலாபம் கிடைக்காது; சட்டமின்றியே 'வரிவிதிப்பு' ஏற்பட்டிருக்காது; காப்பி, தோரிலே, பத்திரிகை விற்பனை செய்பவருக்கோ, வாங்குபவருக்கோ, இலாபமோ நஷ்டமோ ஏற்படத் தேவையில்லை.

"இதைச் செய்ய இப்போதுகூட காலம் தாழ்ந்துவிடவில்லை. புதிய ரூபாய்கள் அச்சிட வேண்டியதுதான்; பழைய நோட்டுகளைச் சிறிது சிறிதாகத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டியதுதான்—இது வெகு சீக்கிரம் நடைபெறக்கூடும்.

"ஏராளமான புதிய 'நயா பைசா'' நாணயங்கள் அச்சடித்து விட்டோமே என்பது, இதைச் செய்யத் தடையாக இருக்க வேண்டியது இல்லை.

"அச்சடித்த நாணயங்களை உருக்கிப் புதிய நாணயங்களாக வார்த்துவிட முடியும். பழைய பைசா நாணயங்களை வைத்துக்கொண்டு சுலபமாக நிர்வாகத்தை நடத்தலாம். பழைய நாணயங்கள் அத்தனையும் அதே அளவு மதிப்புடன், அதே வாங்கும் சக்தியுடன் புழக்கத்தில் இருக்கும்; எந்தவித 'சுரண்டலுக்'கும் இடமிருக்காது!''

பாராட்டுக் கூட்டங்கள்

★

இராசிபுரம்:

மக்கள் சபைக்கு நாமக்கல் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கழக அம்பட்டர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு 30—3—57 அன்று இராசிபுரம் தி. மு. கழகத்தாரால் ஒரு பாராட்டு விழா நடைபெறும். விழாவில் சே. வி. சே. இராமசாமி அவர்களும், டி. வி. சுந்தரராசன் அவர்களும் கலந்துகொள்வார்கள்.

மாலை 6-மணிக்குப் புதுச் சந்தைப்பேட்டையில் ஓர் பொதுக் கூட்டமும் நடைபெறும்.

குளியமுத்தூர்:

31—3—57 காலை குளியமுத்தூர் தி. மு. கழக சார்பில் தேர்தலில் வெற்றிபெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டுமுகத்தான் தோழர் கி. இராமசாமியால் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்குதலும்—பகல் ஏழைகளுக்கு உணவு வழங்குதலும் நடைபெறும்.

மாலை தோழர் கே. ஆர். சண்முகம் தலைமையில் ஓர் மாபெரும் ஊர்வலமும், எம். கருப்பண்ணன் அவர்களால் கொடியேற்றுதலும், தோழியர் பேச்சியம்மாள் இராமசாமியால் மகளிர் ஊர்வலமும் நடத்தப்படும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

1—4—57 காலை 10 மணிக்கு பெங்களூர்—சீராமபுரம் தி. மு. கழக மனையில் தோழர் கே. விஜயன் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். 'ஜனநாயகம்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

நாடு கடத்தப்பட்ட தலைவர் விடுதலை

தாயகத்திற்குத் திரும்பக்கூடாதென தடை

லண்டன், மார்ச் 28—

சைப்ரஸ் விடுதலைப் போராட்டத்தின் முக்கிய தலைவரான மகாரியஸ் பாதிரியாரை விடுதலை செய்யுமாறு பிரிட்டிஷ் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாகப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

'கிரீசுடன் சைப்ரஸ் இணைக்கப்படவேண்டும்' என்று இவர் கிளர்ச்சி செய்தார். அதன் காரணமாக இவரை பிரிட்டிஷ் அரசாங்கம் நாடு கடத்தி, தீவு ஒன்றில் ஐராண்டுக் காலம் சிறையில் வைத்தது. இவருடன் நாடு கடத்தப்பட்ட இவரது மற்ற மூன்று தோழர்களும் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்தக் கட்டத்தில் மகாரியசும் அவரது தோழர்களும் சைப்ரசுக்கு திரும்பக்கூடாது என்றும் உலகின் வேறு எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் அவர்கள் செல்லலாம் என்றும் உத்தரவிட்டிருப்பதாக காலனி அமைச்சர் கூறியுள்ளார்.

தற்போது சைப்ரசில் இயக்கத்தை நடத்திவரும் க்ரைவஸ் கிரிவாஸ்கூட நாடு கடத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது என்றும், அப்போதுதான் நாட்டில் அமைதி நிலவும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கோவை 13-வது வட்டத் தி. மு. கழகச் செயற்குழு

31—3—57 காலை 9 மணிக்கு கோவை 13-வது வட்டத் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

மதுரை நகர் தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

31—3—57 காலை 10 மணியளவில் மேற்கண்ட கிளை செயற்குழு, கழக பணிமனையில் நடைபெறும். அதுபோது எதிர்கால வேலைத் திட்டங்களைக் குறித்து ஆராயப்படும்.

திருப்பத்தூரில் கலை விழா

31—3—57 காலை 9 மணிக்கு திருப்பத்தூர் நியூ சினிமாவில் 'கலைஞன் குரல்' பத்திரிகை நிதிக்காகக் கலைவிழா ஒன்று நடைபெறும். அதில் திரைப்பட நடிகர்கள் எஸ். எ. நடராசன், என். எஸ். நாராயணப்பிள்ளை, டி. வி. ஜமுனாராணி, வசந்தகுமாரி, மாஸ்டர் சுப்பையா ஆகியோர் கலந்துகொள்வர். கலை விழாவில் இசையமைப்பு: எம். ஜி. ஆர். நாடக மன்றக் குழுவினர்.

கழகக் கூட்டம்

★

சேலம் (15-வது வட்டம்)

வன்னியர்குல சத்திரியர் தெரு 31—3—57 மாலை 6 மணிக்கு தலைவர்; ஏ. மாரியப்பன், எம்.சி.

பேசுவோர்:

வி. சிவப்பிரகாசம்
சிற்றுளி-சுப்பிரமணியம்
எஸ். ஏ. அன்புக்கரசு

வெற்றி ஊர்வலம்

30—3—57 மாலை 4 மணியளவில் சென்னை—38-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், 3, முகம்மது உசேன் வீதி கழகப் பணிமனையிலிருந்து தேர்தலில் வெற்றி பெற்ற தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களைப் பாராட்டி ஓர் ஊர்வலம் நடைபெறும். கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டப்படுகிறார்கள்.

காலை 10 மணிக்கு ஏழைகளுக்குக் கஞ்சி வழங்கப்படும்.

★

ஏழைகளுக்கு உணவளிப்பு

30—3—57 பகல் 1 மணிக்கு சென்னை — இராயப்பேட்டை ஜானிஜான்கான் ரோடு அருகிலுள்ள மாதா கோவில் பக்கத்தில் ஆயிரம்விளக்குத் தொகுதியில் வெற்றிபெற்ற ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களைப் பாராட்டுமுகத்தான் தி. மு. கழகத் தோழர்களாலும் ஆதரவாளர்களாலும் ஏழைகளுக்கு உணவு அளிக்கப்படும்.

* * *

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற தி. மு. கழகத் தோழர்களைப் பாராட்டு முகத்தான், 31—3—57 காலை 10-மணிக்கு சென்னை — திருவல்லிக்கேணி 42-வது வட்ட தி. மு. கழக ஆதரவாளர்களால், தோழர்கள் நீல-நாராயணன், கா. அப்பாத்துரை ஆகியோர் தலைமையில் திருவல்லிக்கேணி, மல்லன் பொன்னப்ப முதலித் தெருவிலும் சுப்பராய முதலித் தெருவிலும், ஏழைகளுக்கு உணவு வழங்கப்படும்.

சென்னை—மயிலை தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு:

30—3—57 இரவு 9 மணிக்கு கழகப் பணிமனையில் மயிலை தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது சில முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

மாணவ-மாணவிகள் உண்ணாநோன்பு

மாயூரம், மார்ச் 27—

மாயூரத்தை அடுத்துள்ள திருச்சிற்றம்பலம் காந்தி வித்தியாலயம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்துவந்த இரண்டாம் வகுப்பு மாணவர்கள் ஐவரை, ஏப்ரல் மாதத்தில் நடைபெற இருக்கும் டி.எஸ்.எல்.சி. சர்க்கார் பரீட்சை எழுதக்கூடாது என, அப்பள்ளி தலைமை ஆசிரியர் 'சஸ்பெண்டு' செய்துவிட்டார்.

தலைமை ஆசிரியரின் அச்செயலை மற்ற மாணவ-மாணவிகள் எதிர்த்தும், 'சஸ்பெண்டு' விதியை தலைமை ஆசிரியர் வாபஸ் பெறவில்லை.

எனவே, எல்லா மாணவர்களும் பயிற்சிப் பள்ளியை விட்டு வெளியேறிச் சென்று கல்வி அதிகாரிகளிடம் தங்கள் குறைபாடுகளைத் தெரிவித்தனர்.

கோரிக்கையை அவர்களும் கவனிக்காததினால் 27-3-57 முதல் தங்கள் கோரிக்கை முடியும் வரையில் மாணவர்கள் உண்ணா நோன்பு துவங்கியுள்ளனர்.

(ஒ.நி.)

பொதுச்செயலாளர் அறிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம் அறிந்து மகிழ்ந்தக்கதாகும்.

இந்தப் பொதுத் தேர்தல், அரசியல் கண்ணியத்தையும், நாகரிகத்தையும் எடுத்துக் காட்டியதோடு, தேர்தல் காலத்தில் அமைதியை நிலைநாட்ட திராவிட முன்னேற்றக் கழகம் அரும்பாடுபட்டிருக்கிறது. கழகத்தின் இப்பண்பை மாற்றுக் கட்சியினராலும், பத்திரிகையாளர்களாலும் அரசாங்க அதிகாரிகளாலும் போற்றப்படுவது எங்களுக்கெல்லாம் பூரிப்பை அளிக்கிறது.

ஆட்சிபீடத்திலுள்ளவர்களின் போக்கு எவ்வாறிருப்பினும், இப்பொழுதுத் தேர்தலைப் பொறுத்தவரையில் அச்சம் ஊட்டும் அளவுக்கு பெருங்குழப்பமோ, சண்டை சச்சரவுகளோ ஏற்படாதவகையில் திறம்பட கடமையில் நின்று போலீஸ் இலாகாவினர் பணியாற்றியிருப்பது பாராட்டக் கூடியதாகும்.

இத்தேர்தலில் வெற்றி பெற்று கழகத்தின் பண்பையும், பெருமையையும், செல்வாக்கையும் உயர்த்தித் தந்துள்ள கழக எம். எல். ஏ.-க்களையும், கழக எம். பி.-க்களையும் நாம் மனதாரப் போற்றிப் பாராட்டி வரவேற்பதுடன், அவர்களது உள்ளமெல்லாம் வாழ்க! அவர்களது முயற்சி வளர்க! அவர்களது தொண்டு வெல்க!—என்று வாழ்த்துவோமாக!

நாடெங்கிலுமுள்ள கழகக் கிளைகளும், கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் மேலும் உற்சாகமுடன் உறுதிகொண்டவர்களாகக் கழகப் பணியாற்றி எதிர்கால வெற்றிக்கான நற்நிலையை ஆக்காங்கு உருவாக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்

இரா. நெடுஞ்செழியன்
தி. மு. கழகப் பொதுச்செயலாளர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்குப் பாராட்டு

திருவல்லிக்கேணி கடற்கரையில்

31-3-57 ஞாயிறு மாலை 6-மணிக்கு

★

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில் நடைபெறும்.

★

அண்ணா

அவர்களும், பிறரும் கலந்துகொள்வர்.

பலர் பாராட்டுரை வழங்குவர்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.